# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. நிகரி : 28411377
மின்னஞ்சல்: tnerc@nic.in இணையதளம்: www.tnerc.gov.in

## செய்தி குறிப்பு

எண்.3/2011
நாள் 3–8–2011

மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தீர்ப்புகளினால் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரூ.6000 கோடி இழப்பு எற்பட்டிருப்பதாக குறைகூறி 2–8–2011 அன்று தமிழ்நாடு மின் பொறியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பின் மீது ஆணையத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அச்செய்திக் குறிப்பு மிகைப்படுத்தப்பட்டதாகவும், மறைமுகமாகக் குற்றம் சுமத்துவதாகவும் பொய் கலந்ததாகவும் உள்ளது. மின் பொறியாளர்கள் சங்கம் சந்தேகத்துக்குரிய நிதி ஆதாரங்களுடனும் மற்றும் சந்தேகத்துக்குரிய செலவினங்களையும் உடையதாகும். இந்நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் வழக்குகளை நடத்துவதற்கான விவரிக்கப்படமுடியாத செலவினங்களை கொண்டதாகும்.

2. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு தலைவரையும் மற்றும் இரண்டு உறுப்பினர்களையும் சேர்த்து மூவரை கொண்ட ஆணையமாகும். ஆணையத் தீர்ப்புகள் அனைத்தும் மனுதாரர்களின் மனுக்கள், எதிர் மனுதாரர்களின் எதிர் பிரமாணப்பத்திரம் மற்றும் வாதங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86 ஆம் பிரிவு, உரிமம்தாரருக்கும் மின் உற்பத்தி நிறுனங்களுக்கும் இடையேயான பூசல்களை நீதி முறையில் தீர்க்க ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இவ்வதிகாரத்தினை அனுசரித்தே இவ்வாணையம் மின் உற்பத்தியாளர்களுக்கும் மின் வாரியத்திற்கும் இடையேயான பூசல்களை நீதிமுறையில் தீர்த்து வைக்கிறது. ஆணையத்தின் நீதிமன்ற நடவடிக்கைகள் வெளிப்படையானதாகும். 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 94 ஆம் பிரிவு ஆணையத்திற்கு ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய அதிகாரங்களை வழங்கியுள்ளது. ஆணையத்தின் முன்பு நிகழ்வுறும் நடவடிக்கைகள் அனைத்தும் 95 ஆம் பிரிவின்படி நீதிமன்ற நடவடிக்கைகளாக கருதப்படுதல் வேண்டும். தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் ஆகியோரின் கலந்தாலோசனைக்குப் பின்பு தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. ஆணைய தீர்ப்புகள்

தனி மனிதரால் தீர்மானிக்கப்டுபவையல்ல. தலைவர் மட்டுமே தீர்ப்புகளை தீர்மானிப்பதைப்போல் மின் பொறியாளர்கள் சங்கம் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

3. ஆணையத்தின் தீர்ப்புகள் இறுதியானவை அல்ல. புது தில்லியிலுள்ள மின்சாரத்திற்கான மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் அதன் பின்பு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மூலம் அணுகி பரிகாரம் பெற வாய்ப்புள்ளது. ஆணையத்தின் தீர்ப்புரைகள் உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகாரவரம்பிற்கு உட்பட்டதாகும். குறையுள்ள தரப்பினர் நீதிப்பேராணை மனு மேல் முறையீடு வாயிலாகவும் பரிகாரம் பெற வாய்ப்புள்ளது.

4. உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களைப்போன்று பொது நல வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் ஆணையத்திற்கு வழங்கப்படவில்லை. மின் பொறியாளர்கள் சங்கம் பல முறை ஆணையத்தின் முன்பு பொது நல வழக்குகளை தொடர முயற்சித்து அம்முயற்சியில் தோல்வியடைந்ததால், ஆணையத்திற்கு எதிராக மனக்குறை அடைந்துள்ளது. பொது நல வழக்கு தொடர்பாக இவ்வாணையத்தின் தீர்ப்புரை புதுதில்லியிலுள்ள மின்சாரத்திற்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

5. ஜி.எம்.ஆர், பி.பி.ன். மின் உற்பத்தி நிறுமம், எஸ்.டி–சி.எம்.எஸ், மதுரை மின் நிறுமம் மற்றும் சாமல்ப்பட்டி மின் கழகம் ஆகிய நிறுவனங்கள் மின் வாரியத்துடன் 1996 முதல் 1998 வரை மின் கொள்முதல் உடன்பாடுகளை செய்து கொண்டுள்ளன. ஒப்பந்ததரப்பினர் எந்த நேரத்திலும் ஒப்பந்த ஷரத்துக்களை திருத்தியமைத்துக் கொள்ளலாம். ஒப்பந்தங்களுக்கு திருத்தங்கள் செய்வது என்பது அந்த இருதரப்பினரை பொறுத்ததாகும். ஒப்பந்த தரப்பினர் பேச்சு வார்த்தை நடத்துவதை ஆணையம் ஒரு போதும் நிறுத்தி வைத்ததில்லை. மின் வாரியத்தையும் ஐந்து மின் உற்பத்தியாளர்களையும் மின் கொள்முதல் உடன்பாடுகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தும்படி 2004 ஆம் ஆண்டு, ஆணையம் ஒரு தீர்ப்புரை வழங்கியது. ஆனால் சென்னை உயர் நீதிமன்றம் ஆணையத்தின் தீர்ப்புரைக்கு தடையாணை விதித்தது. இவ்வழக்கு இன்றளவும் நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ளது. இந்த தடையாணையை நீக்கம் செய்வது இவ்வாணையத்தின் கடமையல்ல. சம்பந்தப்பட்ட மின் வாரியமோ அல்லது மின் உற்பத்தியாளர்களே தடையாணையை நீக்கம் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். நிலுவையிலுள்ள நீதிப்பேராணை மனுவின் மீது மின் பொறியாளர்கள் சங்கம் கருத்து கூறியுள்ளது உயர் நீதிமன்ற அவமதிப்பாகும்.

6. மேற்சொன்ன ஐந்து மின் உற்பத்தியாளர்கள் மின் வாரியத்திற்கு ரூ.2000 கோடி செலுத்த வேண்டி இருப்பதாக மின் பொறியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது உண்மையாக இருந்தால் சட்ட முறைகளை பயன்படுத்தி அத்தொகையை வசூலிக்க மின் வாரியத்திற்கு உரிமையுண்டு. அத்தகைய உரிமையை தடை செய்யும் ஆணை எதனையும் இவ்வாணையம் பிறப்பிக்கவில்லை. ஆணையத்தின் தீர்ப்புரைகளின் காரணமாக மின் வாரியத்திற்கு ரூ,6000

கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மின் பொறியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எந்த அடிப்படையில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது என்பது தெளிவாக்கப்படவில்லை. தொகைக்கான விவரங்களும் அளிக்கப்படவில்லை. இவை இழப்பா ? அல்லது மின் வாரியம் மின் உற்பத்தியாளர்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கு சட்டபூர்வமாக செலுத்த வேண்டிய தொகையா ?

7. காலாவதியான ரூ.315 கோடி மதிப்புடைய 315 மில்லியன் யூனிட் மின்சாரத்தை மின் வாரியம் காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்க ஆணையம் உத்தரவிட்டதாக மின் பொறியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பான ஆணையத்தினுடைய தீர்ப்புரை சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் அமைந்தபடியால் மின் பொறியாளர்கள் சங்கத்தின் கருத்து சென்னை உயர் நீதிமன்றத்தினை நேரடியாக அவமதிக்கும் செயலாகும்.

8. தகவல் தொழில்நுட்ப நிறுமங்களுக்கு சலுகையுடன் கூடிய மின்கட்டண வீதம் அளிக்கப்பட்டுள்ளதாக மின் பொறியாளர்கள் சங்கம் குறை கூறியுள்ளது. மாநில அரசின் தகவல் தொழில் நுட்ப துறை மற்றும் மின் வாரியம் வேண்டுகோளின்படியே மேற்கண்ட சலுகையுடன் கூடிய மின் கட்டணம் அளிக்கப்பட்டுள்ளது. இது மின்கட்டண ஆணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன உண்மையை வேண்டுமென்றே மறைத்து பத்திரிக்கைகளுக்கு தவறான செய்திகளை மின் பொறியாளர்கள் சங்கம் கொடுத்துள்ளது.

9. ஆணையத்தின் மின்கட்டணத் தீர்ப்புக்கு எதிராக, புதுதில்லியிலுள்ள மின்சாரத்திற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்பு, சில தரப்பினர் மேல்முறையீடு செய்ததில் தீர்ப்பாயம் தகவல் தொழில்நுட்ப நிறுமங்களுக்கு சலுகை காட்டியதை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த சலுகைகள் குறித்து மின் பொறியாளர்கள் சங்கம் ஏன் தீர்ப்பாயத்தை அணுகவில்லை ? பொறியாளர்கள் சங்கத்தின் கருத்து தீர்ப்பாயத்தை அவமதிப்பது போன்றதாகும்.

10. மின்சாரச் சேமிப்புக் கணக்கில் கொள்ள காற்றாலை மின்உற்பத்தியாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மின் பொறியாளர்கள் சங்கம் குறை கூறியுள்ளது. 1986ஆம் ஆண்டு முதல் மின் வாரியம் நடைமுறைக்கு கொண்டு வந்ததையே ஆணையம் பின்பற்றியுள்ளது. இவ்வாணையத்தின் உத்தரவு புதுதில்லியிலுள்ள மின்சாரத்திற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுதொடர்பாகவும் தீர்ப்பாயத்தின் முன்பு மேல்முறையீடு தாக்கல் செய்ய மின் பொறியாளர்கள் சங்கம் எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

11. திறந்த நுழைவுரிமை தொடர்பாக சலுகை கட்டணத்தை, காற்றாலை மின்உற்பத்தியாளர்களுக்கு ஆணையம் வழங்கியதாக மின் பொறியாளர்கள் சங்கம் குறை

கூறியுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை தக்க நடவடிக்கைகள் மூலம் ஊக்குவிக்க வேண்டும் என்று 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86ஆம் பிரிவில் கண்டுள்ள வகைமுறையை அனுசரித்தே மேற்சொன்ன சலுகைக் கட்டணத்தை ஆணையம் வழங்கியது. இது தொடர்பாகவும்கூட புதுதில்லியிலுள்ள மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் மின் பொறியாளர்கள் சங்கம் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை.

12. ஓ.பி.ஜீ. மின் நிறுவனம், ஓ.பி.ஜீ புதுப்பிக்கத்தக்க மின் நிறுவனம் , ரெங்கராஜ் மின் நிறுவனம் , மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், சகேலி ஏற்றுமதி நிறுவனம் போன்ற நிறுவனங்கள் தொடர்பாக நீண்டகால திறந்த நுழைவுரிமை ஷரத்துக்களை ஆணையம் தவறாக பொருள் விளக்கம் கொண்டபடியால் மின் வாரியத்திற்கு ரூ.112/– கோடி இழப்பு ஏற்படுத்தியதாக மின் பொறியாளர்கள் சங்கம் குறை கூறியுள்ளது. குறுகியகால மற்றும் நீண்டகால திறந்த நுழைவுரிமை தொடர்பாக ஆணையத்தின் விளக்கம் புதுதில்லியிலுள்ள மின்சாரத்திற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மின் பொறியாளர்கள் சங்கம் இது தொடர்பாகவும் ஆணையத்தின் கருத்துக்கு எதிராக மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் வாதிடாதது அறிவுக்கெட்டாத ஒன்றாகவுள்ளது. இது மின்வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பா? அல்லது மின்வாரியம் மின்உற்பத்தியாளர்களிடமிருந்து அதிக கட்டணம் வசூலித்துள்ளதா ?

13. ஜீ.எம்.ஆர். மற்றும் பி.பி.என் மின் நிறுமம் தொடர்பான பணக் கோரிக்கைகள் சம்பந்தமாக இரண்டு மனுக்களை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதித்ததாக மின் பொறியாளர்கள் சங்கம் குறை கூறியுள்ளது. பி.பி.என். மின் நிறுமம் தொடர்பான ஆணையத்தின் தீர்ப்புரை மின்சாரத்திற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தற்போது உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. ஜீ.எம்.ஆர் மின் நிறுமம் தொடர்பான ஆணையத்தின் தீர்ப்புரை, மின்சாரத்திற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் நிலுவையிலுள்ளது. நீதிமன்ற நிலுவையிலுள்ள இப்பொருள் தொடர்பாக குறை கூறி கருத்து தெரிவித்ததன் வாயிலாக மின் பொறியாளர்கள் சங்கம் உச்சநீதி மன்றத்தையும், மின்சாரத்திற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தையும் அவமதிப்பு செய்துள்ளது.

14. பி.பி.என். மின் நிறுவனத்தின் மூலதனச் செலவுத்தொகை (Capital Cost) 2007ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்படாமலிருப்பதாக மின் பொறியாளர்கள் சங்கம் குறை கூறியுள்ளது. பி.பி.என். மின் நிறுமத்தினால் தொடரப்பட்ட வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்ததே தாமதத்தின் காரணம். பி.பி.என். தொடர்ந்துள்ள ஒரு வழக்கு மற்றொரு வழக்குடன் தொடர்புடையதல்ல. மேலும் மூலதனச் செலவுத் தொகையை நிர்ணயம் செய்வது என்பது முன் தேதியிட்டு நடைமுறைப்படுத்தப்படும். மின் வாரியம் அதனால், பாதிக்கப்படுமாயின் பி.பி.என். மின்

நிறுமம் அத்தொகைக்கான வட்டியை மின் கொள்முதல் உடன்பாட்டின் அடிப்படையில் முன் தேதியிட்டு கணக்கிட்டு திரும்ப வழங்க வேண்டும்.

15. மேற்சொன்ன அனைத்து உண்மைச் சங்கதிகளும் 2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மின் பொறியாளர்கள் சங்கத்திற்கு தெளிவாக்கப்பட்டிருப்பினும், அச்சங்கம் பாதி உண்மைகளைத் தெரிவிப்பதையும், ஆணையத்தின் மீது மறைமுகமாக குற்றம் சுமத்துவதையும் தொடர்ந்து செய்து வருகிறது. ஒருவேளை பொய்களைத் திரும்பத் திரும்பச் சொல்வதனால், அப்பொய்கள் உண்மையாகிவிடும் என்ற கருத்து மின் பொறியாளர்கள் சங்கத்திற்கு இருக்கக்கூடும்.

**(சி. குணசேகரன்)**
செயலாளர்